**MCOP NO:1199/2023** **DATE:07.11.2025**

ம.சா : 2

பெயர் : திரு. ஏழுமலை

த/பெ : திரு. வெங்கடேசன்

வயது : 23

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:</u>**

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்கவரவில்லை. விபத்து குறித்த குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. விபத்தானது 13.11.2022 அன்று நடந்தது என்றால் சரிதான். நான் அடிப்பட்ட நபருக்கு பின்னால் நானும், எனது நண்பரும் சென்று கொண்டிருந்தபோது எனக்கு முன்னால் சென்ற நபருக்கு விபத்து ஏற்பட்டதை நான் பார்த்தேன். விபத்தானது அரக்கோணம் KVS எடைமேடை அருகே நடந்தது. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் சொல்ல முடியுமா என்றால் TN 73 AV 0524 என்பதாகும். விபத்து சமயத்தில் எனது நண்பர் வண்டி ஓட்ட நான் பின்னால் அமர்ந்து நண்பர் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தோம். விபத்தின்போது இறந்துபோன நபரும் அந்த வாகனத்தில் வந்த மற்றொரு நபரும் தலைக்கவசம் அணிந்திருந்தார்கள். மிதி வண்டி இறந்துபோன நபரின் வாகனத்திற்கு முன்னால் சென்று கொண்டிருந்தது அப்போது இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் வேகாக சென்று மிதி வண்டியில் மோதியதால் பின்னால் அமர்ந்து சென்ற நபருக்கும், வாகனத்தை ஓட்டிய நபருக்கும் அடிப்பட்டது. அடிபட்ட நபரை ஆம்புலன்ஸ் வராததால் காரில் வைத்து அழைத்து சென்றார்கள். அடிபட்ட நபரின் வீட்டிற்கு தகவல் சொன்னது யார் என்று எனக்கு தெரியாது. மனுதாரருக்கு உதவ வேண்டி பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.